**இலங்கை புடைவை மற்றும் ஆடைகள் நிறுவகம் - 2021**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இலங்கை புடைவை மற்றும் ஆடைகள் நிறுவகத்தின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுக்களுடன் தொடர்புடைய குறிப்புகள், முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2021 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டம் மற்றும் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டம் என்பவற்றின் ஏற்பாடுகள் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களின் தாக்கத்தைத் தவிர்த்து, நிறுவகத்தின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்ற வகையில் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளது என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக் கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது. நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, நிறுவகம் தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பிட செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது நிறுவகத்தை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிறுவகத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் நிறுவகத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு நிறுவகம் அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் அறிக்கைகளை முறையாக பேணுதல் வேண்டும்.

### 1.4 கணக்காய்வின் நோக்கெல்லை (நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்)

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்தும் நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாதத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்.

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணம் தயாரித்தல், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி நிறுவகத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு நிறுவகத்திற்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியளவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் நிறுவகத்தின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

வேண்டப்பட்டவாறு எந்த நேரத்திலும் பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாக கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- நிறுவகத்தின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீ செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைமுறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- நிறுவகத்தின் கட்டுப்பாட்டு சபையால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்து மூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் நிறுவனம் இணங்கியிருந்ததா என்பதும்,

- நிறுவகத்தின் அதன் அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும், மற்றும்

- நிறுவகத்தின் வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுததப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

## 1.5 நிதிக்கூற்றுக்களின் தயாரிப்பு தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.5.1 நிதிக்கூற்றுக்களின் தயாரிப்பு மீதான உள்ளகக் கட்டுப்பாடு

முகாமைத்துவத்தின் பொதுவான அல்லது குறித்துரைக்கப்பட்ட அங்கீகாரத்துடன் கொடுக்கல் வாங்கல்கள் மேற்கொள்ளப்படுகின்றன என்றும் பொருத்தமான அறிக்கையிடல் நியமங்களிற்கிணங்க நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்படுவதை அனுமதிப்பதற்கும் சொத்துக்களிற்கான கணக்களிப்பொறுப்பை பேணுவதற்கும் தேவையானவாறு கொடுக்கல் வாங்கல்கள் பதிவு செய்யப்படுகின்றன என்றும் முகாமைத்துவத்தின் பொதுவான அல்லது

குறித்துரைக்கப்பட்ட அதிகாரத்தின் பிரகாரம் மாத்திரமே சொத்துக்களை அணுகுவதற்கு அனுமதிக்கப்படுகின்றது என்றும் பதிவு செய்யப்பட்ட சொத்துக்களிற்கான கணக்களிப்பொறுப்பு ஏற்கனவேயுள்ள சொத்துக்களுடன் நியாயமான கால இடைவெளிகளில் ஒப்பீடு செய்யப்படுகின்றன என்றும் ஏதாவது வேறுபாடுகள் தொடர்பாக பொருத்தமான நடவடிக்கை எடுக்கப்படுகின்றது என்றும் நியாயமான உறுதிப்பாட்டை வழங்குவதற்கு போதுமான உள்ளகக் கணக்கீட்டுக் கட்டுப்பாட்டு முறைமையொன்றை "திட்டமிட்டு பேணுதல்" நிறுவனங்களிற்கு அவசியமாக உள்ளது.

### 1.5.2 இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை

| | உரிய நியமங்களுடன் தொடர்பான இணங்காமைகள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டின் இறுதியில் முழுமையாக பெறுமானத் தேய்விடப்பட்ட ரூபா 220,653,126 கிரயமான ஆதனம், பொறி மற்றும் உபகரணங்கள் இன்னும் பயன்பாட்டில் இருந்த போதிலும் அவை தொடர்பாக நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. மேலும், இ.பொ.க.நி 03 இன் பிரகாரம் அச் சொத்துக்களின் பயன்தரு ஆயுட்காலம் தொடர்பான மதிப்பீட்டு ரீதியான தவறை மீண்டும் மீளாய்வு செய்து நிதிக்கூற்றுக்களில் சீர்செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | நிறுவன சொத்துக்கள் மதிப்பீட்டறிக்கையை பெற்றுக் கொள்ள நீண்ட காலமாக குறித்த அலுவலர்களுக்கு நினைவூட்டல் கடிதம் அனுப்பிய போதும் அறிக்கை தாமதமாகியுள்ளது. இதனை செம்மையாக்க நடவடிக்கை எடுப்பதாக. | இ.பொ.க.நி 03 பிரகாரம் இச் சொத்துக்களின் பயன்தரு ஆயட்காலம் தொடர்பாக மதிப்பீட்டு ரீதியான தவறை மீண்டும் மீளாய்வு செய்து நிதிக்கூற்றுக்களில் செம்மையாக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 02 இன் பிரகாரம் கணக்காண்டினுள் பணமாக கிடைத்த மற்றும் பணமாக செலுத்திய கொடுப்பனவு மாத்திரம் காசுப் பாய்ச்சல் கூற்றிற்கு உட்படுத்தப்பட வேண்டிய போதும் கடந்த ஆண்டு கருத்திட்டமொன்றிற்காக கிடைத்த ரூபா 9,900,000 இனை மீளாய்வாண்டின் காசுப் பாய்ச்சல் கூற்றில் நிதி செயற்பாடுகளினால் கிடைத்த பாசுப் பாய்ச்சலாகவும், ஆண்டிற்குரிய மணிக்கொடை ஒதுக்கத்தை இயக்க செயற்பாடுகளுடன் செம்மையாக்க வேண்டிய போதும் அதனை செயற்பாட்டு மூலதன மாற்றலின் கீழும் ஏனைய கருத்திட்டங்களிற்கான கிடைப்பனவு மற்றும் கொடுப்பனவு வெவ்வேறாக காட்டுவதற்குப் பதிலாக மீளாய்வாண்டின் மீதியை, கடந்த ஆண்டின் மீதியுடனான வித்தியாசத்தை நிதி செயற்பாடுகளால் கிடைத்த காசுப் பாய்ச்சல் ஒன்றாக செம்மையாக்கப்பட்டிருந்தது. | 2020 ஆண்டு மூலதன கருத்திட்டமொன்றிற்காக கிடைத்த ரூபா 9,900,000 தொகையை மீண்டெழும் தன்மையயிலான கருத்திட்டமாக கருதி கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் அவ்வாண்டில் காசுப் பாய்ச்சலில் விஷேட கருத்திட்டத்திற்காக கிடைத்த பணத்தினுள் அறிக்கையிடப்பட்டுள்ளது. மூலதன அன்பளிப்பு தவறாக கணக்கீடு செய்தலை 2021 ஆண்டில் சீராக்கியதுடன் 2021 ஆண்டின் காசுப் பாய்ச்சல் கூற்றில் நிதி செயற்பாடுகளால் கிடைத்த காசுப் பாய்ச்சலாக | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 02 இன் பிரகாரம் கணக்காண்டினுள் பணமாக கிடைத்த மற்றும் பணமாக செலுத்திய கொடுப்பனவு மாத்திரம் காசுப் பாய்ச்சல் கூற்றிற்கு உட்படுத்தப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | காட்டப்பட்டிருந்தது. அதனை Capital Grant Error Correction ஆக காட்டப்பட்டிருந்தது. பணிக்கொடைக்கான ஒதுக்கீடு காசுப் பாய்ச்சல் கூற்றில் செயற்பாட்டு மூலதன மாற்றலின் கீழ் சமர்பித்துள்ளதாக. | |
| (இ) | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் இலக்கம் 15 பிரகாரம் நிறுவனத்தினால் நிதிக்கூற்றுக்களிலான குறிப்பினுள் அங்கீகார வரவு செலவு திட்டம் பாதீடு செய்யப்பட்ட அடிப்படை மற்றும் பின்பற்றிய வகைப்படுத்தலின் அடிப்படையை வெளிப்படுத்த வேண்டிய போதும் மீளாய்வாண்டு வரவு செலவுத் திட்டம் தொடர்பான தகவல்கள் நிதிக்கூற்றுக் குறிப்புகளில் வெளிப்படுத்தியிருக்கவில்லை. | பாதீடு தொடர்பான தகவல்களை இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் இலக்கம் 15 பிரகாரம் எதிர்காலத்தில் தயாரிக்கப்படும் நிதிக்கூற்றினுள் உள்ளடக்க நடவடிக்கை எடுப்பதாக. | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் இலக்கம் 15 பிரகாரம் நிறுவனத்தினால் நிதிக்கூற்றுக்களிலான குறிப்பினுள் அங்கீகார வரவு செலவு திட்டம் பாதீடு செய்யப்பட்ட அடிப்படை மற்றும் பின்பற்றிய வகைப்படுத்தலின் அடிப்படையை வெளிப்படுத்த வேண்டும். |

## 1.6 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முகாமைத்துவ தீர்மானங்கள் போன்றவற்றுடன் இணங்காமை

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் போன்றவற்றுடனான தொடர்பு | இணங்காமைகள | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|---|---|
| (அ) | 1994 ஜுன் 14 ஆம் திகதிய 95 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கை மற்றும் 2000 ஜனவரி 11 ஆம் திகதிய PF/PE 5 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கை | I நிறுவனமொன்றினால் ஊழியர்களுக்கு வழங்கப்படும் அனைத்து படிகளுக்கும் பொது திறைசேரியின் அங்கீகாரம் பெறப்பட வேண்டிய போதிலும், மீளாய்வாண்டில் ஆய்வுகூட பரிசோதனை படிகள், மற்றும் வார இறுதி கற்கைநெறி ஆளணி படிகள், ஆலோசகர்களின் படிகள், கற்கைநெறி ஒருங்கிணைப்பு | 2021 திசெம்பர் 07 திகதி தேசிய சம்பளங்கள் ஆணைக்குழுவுடன் மேற்கொண்ட கலந்துரையாடலிற்கு உரிய தகவல்களை சமர்பித்து அசைசினூடாக தேசிய சம்பளங்கள் ஆணைக்குழுவிற்கு அறிக்கையொன்று சர்பிக்கப்பட்டுள்ளது. அதற்கான பதில் கடிதமொன்று கிடைத்த பின்னர் தேவையான நடவடிக்கை எடுக்க திட்டமிட்டிருப்பதாக. | சுற்றறிக்கை ஆலோசனைகளுக்கு இணங்க செயற்பட வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | கட்டணங்கள் போன்ற படிகளிற்காக கூட்டுத் தொகை ரூபா 11,246,760 செலுத்தப்பட்ட போதும் அது தொடர்பாக திறைசேரயின் அங்கீகாரம் பெறப்பட்டிருக்கவில்லை. | | |
| | | ii நிறுவன ஊழியர்களின் மருத்துவ பட்டியல்களின் காப்பிற்கான காப்புறுதிக்காக மீளாய்வாண்டின் தவணையாக ரூபா 1,475,953 தொகையும், மருத்துவக் பட்டியல்களை மீள்நிரப்புச் செய்வதற்காக ரூபா 1,674,573 தொகையும் திறைசேரியின் அங்கீகாரம் பெறப்படாது செலுத்தப்பட்டிருந்தன. | மருத்துவ காப்புறுதிக்காக மற்றும் மருத்துவ பட்டியல் மீள்நிரப்பிற்காக கட்டுப்பாட்டு சபையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. | சுற்றறிக்கை ஆலோசனைகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) | 2018 திசெம்பர் 31 இன் 04/2018 ஆம் இலக்க சொத்துக்கள் முகாமைத்துவ சுற்றறிக்கையின் 02 பந்தி | அனைத்து அரச நிறுவனங்களினாலும் தமது நிறுவனத்தின் கீழான அனைத்து நிதியல்லா சொத்துக்கள் தொடர்பாக சரியான தகவல்களை கொம்டோலர் ஆணையாளரிற்கு சமர்பிக்க வேண்டிய போதும் மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியிலான ரூபா 471,325,349 ஆன உட்கட்டமைப்பு வசதிகள், இயந்திர உபகரணங்கள் தொடர்பான தகவல்களை அறிக்கையிட்டிருக்கவில்லை. | இச் சொத்துக்கள் தொடர்பாக நாளாதுவரையாக்கப்பட்ட சொத்துக்கள் அறிக்கையை இதுவரை பூர்த்தி செய்தில்லாததால் அவ்வறிக்கை கிடைத்த பின்னர் சொத்துக்கள் தொடர்பான சரியான தகவல்களை அவ் அலுவலகத்திற்கு அனுப்ப நடவடிக்கை எடுப்பதாக. | சுற்றறிக்கை ஆலோசனைகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| (இ) | 1987 இன் 03 ஆம் இலக்க பொது ஒப்பந்த சட்டத்தின் 08 ஆம் உப பிரிவு | ரூபா 05 மில்லியனிற்கு அதிகாமான அனைத்து ஒப்பந்தங்கள் தொடர்பாகவும் விலைமனு சமர்பிக்கும் போது மனுதாரர்களை இச் சட்டத்தின் கீழ் பதிவு செய்திருக்க வேண்டியமை விலைமனு மதிப்பீட்டின் போது கருத்திற் கொள்ள வேண்டிய போதும். ஒப்பந்த பெறுமதி கூட்டுத்தொகை ரூபா 76,746,805 ஆன ஒப்பந்த/பெறுகைகள் 03, தொடர்பாக அவ்வாறு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | தொழிநுட்ப குழுவினால் விலைமனு மதிபபீட்டின் போது அரசினால் அறிவித்த பெறுகைகள் வழிகாட்டி கோவை பின்பற்றப்படுகிறது. இதன் பிரகாரம் விலைமனு மதிப்பீட்டின் போது மனுதாரர்களை 1987 இன் 03 இலக்க பொது ஒப்பந்த சட்டத்தின் 08 ஆம் உப பிரிவின் பிரகாரம் பதிவுசெய்யப்பட வேண்டுமென குறிப்பிடப்படவில்லை. இதன் பிரகாரம் இதுவரை தொழிநுட்ப குழு விலைமனு மதிப்பீட்டின் போது இதனை கருத்திற் கொள்ளவில்லை என. | அரசினால் விதிக்கப்படும் ஆலோசனைகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

**2. நிதி மீளாய்வு**

**2.1 நிதி விளைவுகள்**

மீளாய்வாண்டிற்கான செயற்பாட்டு விளைவுகள் ரூபா 13,031,502 மிகையொன்றாக இருந்ததுடன் அதற்கு எதிராக முன்னைய ஆண்டின் பற்றாக்குறை ரூபா 21,654,813 ஆக காணப்பட்டது. அதன் பிரகாரம் நிதி விளைவுகளில் ரூபா 34,686,315 தொகையான வழர்ச்சியொன்று அவதானிக்கப்பட்டது. இவ் வழர்ச்சிக்கு ஆராய்சி மற்றும் தொழிநுட்ப சேவைகளை வழங்குவதிலிருந்தான வருமானம் அதிகரித்தமை மற்றும் பழுதுபார்த்தல் மற்றும் பராமரிப்பு செலவினங்கள் குறைவடைந்தமை பிரதான காரணமாக காணப்பட்டன.

**3. செயற்பாட்டு மீளாய்வு**

**3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்**

| | கணக்காய்வு அவதானிப்புகள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | வகுப்பறைகளின் இடவசதிகளை மேம்படுத்தும் கருத்திட்டத்தின் கீழ் மேற்கொண்ட தையல் | கட்டப்பாட்டு சபையின் அங்கீகாரத்துடன் 2021 ஜுலை 03 ஆம் வாரம் வரை இந்த ஒப்படை | ஒப்பந்த உடன்படிக்கையின் நியமங்களுக்கு |

| | | |
|---|---|---|
| அறையை நவீனமயமாக்கும் ஒப்பந்த உடன்படிக்கையின் 49.1 பிரிவிற்கு இணங்க ஒப்பந்தத்தின் தாமத காலத்திற்காக அறவிட வேண்டியிருந்த ரூபா 1,252,900 இனை சேவைபெறுனரிடமிருந்து அறவிட்டிருக்காததுடன் ஒப்பந்தத்தின் வேலை பூர்த்தி அறிக்கையை 2022 ஜூன் 30 திகதி வரையும் கிடைத்திருக்காத போதும் செயலாற்றுகை காப்பின் செல்லுபடியாகும் தன்மை 2022 பெப்ரவரி 28 திகதியுடன் முடிவடைந்திருந்தது. | காலம் நீடிக்கப்பட்டதுடன் அங்கு வேலை முடிவுறுத்தல் ஜூலை மாதம் இறுதியில் இடம்பெற்றது. செயலாற்றல் காப்புறுதி நீடிப்பதற்கு ஒப்பந்ததாரருக்கு வாய்மூலம் மற்றும் எழுத்து மூலமா அறிவூட்டப்பட்டுள்ள போதும் அவரால் அதை நீடிப்பதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. எவ்வாறாயினும், நிறுவனத்தால் 5% நிறுத்தலை வைத்துக் கொண்டுள்ளது. இதை பெறுவதன் உறுதி திகதி முதல் ஓர் வருடத்திற்கு பின்னர் கொடுப்பனவு நடவடிக்கை மேற்கொள்வதாக. | இணங்க நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) மீளாய்வாண்டு இறுதி திகதிக்கு 03 ஆண்டுகளை விஞ்சிய கூட்டுத் தொகை ரூபா 4,735,969 ஆன கடன்படுனர் மீதியை அறவிட போதிய செயற்பாடுகள் எடுத்திருக்கவில்லை. | குறித்த கடன்படுனர்களுக்காக தொடர்ந்து பணம் செலுத்துமாறு நிளைவூட்டும் கடிதம் அனுப்பப்படும். ஆயினும் 03 ஆண்டுகளை விஞ்சிய கடன்படுனர்கள் பணம் செலுத்துதல் போதிய சாதகமான நிலைமையில் இல்லை. | கடன்படுனர் மீதியை அறவிட போதிய செயற்பாடு எடுக்க வேண்டும். |

**3.2 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்**

| கணக்காய்வு அவதானிப்புகள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|
| (அ) 2009 இன் 12 ஆம் இலக்க இலங்கை புடைவை மற்றும் ஆடைகள் நிறுவக சட்டத்தின் 5 (இ) பிரிவின் பிரகாரம் தேசிய மற்றும் சர்வதேச பல்கலைக்கழகங்கள் மற்றும் நிறுவனத்துடன் தொடர்புகளை பேணி புடைவை மற்றும் ஆடை கைத்தொழில் துறை தொடர்பான பட்டப்படிப்பு மற்றும் பட்டப்பின் படிக்கு பட்டங்களை வழங்க வேண்டிய போதும், கணக்காய்வு திகதிய 2022 ஜூன் 10 திகதியளவில் இலங்கை தொழிநுட்ப பல்கலைக்கழகம் (Univotec) உடன் ஒன்றிணைந்து பட்டங்களை வழங்க ஆரம்ப புரிந்துணர்வு ஒப்பந்தமொன்று மாத்திரம் தயாரிக்கப்பட்டிருந்தது. | இரண்டு பட்டதாரி பாடநெறிகளை ஆகஸ்ட் மாதமளவில் ஆரம்பிப்பதாகவும் அதற்கு மேலதிகமாக் ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்துடன் இணைந்து B.Tech பட்டமொன்றை வழங்க பல முயற்சிகளை எடுத்த போதும் அதற்காக செலவிட நேரிடும் கியத்தை கவனிக்கையில் நிறுவனத்திற்கு ஏற்க முடியாத பெறுமானமானது. எனினும் இந்த பட்டத்திற்கு உயர் கேள்வியொன்று உள்ளதால் எதிர்காலத்தில் அது தொடர்பாக கவனத்திற் கொண்டு நடவடிக்கை எடுக்க எதிர்பார்ப்பதாக. | சட்டத்தில் குறிப்பிடப்படும் நோக்கங்களை அடைந்து கொள்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | மேற்குறித்த சட்டத்தின் 4(ஐ) ஆம் பிரிவின் பிரகாரம் உற்பத்தி, இறக்குமதி, ஏற்றுமதி மற்றும் ஏனைய தொழிநுட்ப தகவல்கள் உள்ளடங்கிய புடைவை மற்றும் ஆடைகள் கைத்தொழில் தொடர்பான தரவுத் தளம் ஒன்று பேணப்பட வேண்டிய போதிலும் ஆரம்பமாக ஒன்றிணைந்த தரவுகள் உள்ளிட்ட தகவல் தொகுதியொன்றை நிறுவனத்தினால் பேணி இருக்கவில்லை. | தரவுத் தளம் ஒன்றை பேணக் கொள்ள நிறுவனத்திற்கு தரவுகளை திரட்டல், பேணிச் செல்லுதல் மற்றும் பகுப்பாய்விற்காக செலவொன்றை செய்ய வேண்டி ஏற்படுகிறது. ஏனென்றால் அதற்காக வேறொரு ஆளணியை, தொகுதியை நிருவுவதற்கு நிதி கிரயமொன்றை செய்ய வேண்டும். எனினும் எதிர்காலத்தில் அதனை கருத்திற் கொள்ள நடவடிக்கை எடுப்பதாக. | சட்டத்தின் செயற்பாடுகளை மேற்கொள்வதற்கு நடவடிக்கைகளை எடுக்க வேண்டும். |
| (இ) | உள்நாட்டில் உற்பத்தி செய்யப்பட்ட மற்றும் இறக்குமதி செய்யும் புடவை மற்றும் ஆடை உற்பத்திகள் உள்நாட்டு சந்தைக்கு உட்படும் போது சுகாதார மற்றும் காப்புறுதி சான்றிதழி ஒன்றை பெற்றுக் கொடுப்பது முக்கியமான தேவைபாடொன்றாக ஏற்படுத்தி அவ் உறுதிப்படுத்தும் அதிகாரம் நிறுவனத்திற்கு 2017 திசெம்பர் அமப/17/2707/723/050 கொண்ட அமைச்சரவை தீர்மானத்தினால் பெற்றுக் கொடுத்த போதும் முன் செயற்பாடுகள் மேற்கொள்ளாததனால் உளநாட்டு சந்தையினுள் நிலவும் ஆடைகளில் சுகாதாரதன்மை மற்றும் பாதுகாப்புப் தன்மை உறுதியாகி இருக்கவில்லை. | இது அமைச்சரவை அங்கீகாரத்தின் கீழ் செயற்படுத்திய கருத்திட்டமாகும். இந்த சுகாதாரத்தன்மை மற்றும் பாதுகாப்பு தன்மையை உறுதி செய்து கொள்ள இந்த கருத்திட்டம் தொடர்பாக நடவடிக்கை எடுப்பதற்காக நியாயமான தொகையொன்றை செலுத்த வேண்டி ஏற்படும். இதற்காக தேவையான செயற்பாடுகளை எடுக்க நிதிசார் ஏற்பாடுகளை கோரி அறிக்கையொன்று அனுப்பப்பட்டள்ளதுடன் அதற்காக சாதகமான பதிலொன்று கிடைத்திருக்கவில்லை. தேவையான ஏற்பாடுகள் கிடைத்தால் அதற்கான முன் செயற்பாடுகளை மேற்கொள்ள நடவடிக்கை எடுப்பதாக. | ஆடைகளில் சுகாதார மற்றும் பாதுகாப்புத்தன்மை உறுதிப்படுத்தப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஈ) | மீளாயிவாண்டினுள் செயற்படுத்துவதற்கு திட்டமிட்டிருந்த ரூபா மில்லியன் 2 இற்கும் 3 இற்கும் இடைலான 3 கருத்திட்டங்களிற்காக ஏற்பாடுகள் கிடைக்கும் தாமதத்தினால் அக் கருத்திட்டங்களின் பௌதீக முன்னேற்றம் 25 சதவீதத்திற்கும் 30 சதவீதத்திற்கும் இடைலாக இருந்தது. | ஆண்டில் திட்டமிடப்பட்ட கருத்திட்டங்களிற்குரியதான மூலதன பெறுவனவு ரூபா 100 மில்லியனிலிருந்து ரூபா 75 மில்லியன்கள் 2021 ஆண்டின் திசெம்பர் மாதத்திலேயே திறைசேரினால் அனுப்பப்பட்டது. அதனால் பல கருத்திட்டங்கள் ஒறே நேரத்தில் ஆரம்பிக்க வேண்டி ஏற்பட்டதனால் 03 கருத்திட்டங்களில் மாத்திரம் பௌதீக முன்னேற்றம் 25 சதவீதத்திற்கும் 30 சதவீதத்திற்கும் இடையிலானதாக. | கருத்திட்டங்களை பூர்த்தி செய்துகொள்ள முடியுமானதாக ஏற்பாடுகளை கோர நடவடிக்கை எடுக்க வேண்டும். |